# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணைப் பரீட்சை - 2023

| தரம் : 10 | பாடம் : வணிகமும் கணக்கீட்டு கல்வியும் | நேரம் :- 2 ½ மணி |
|---|---|---|

பெயர் / சுட்டெண் :......................................................................................................

### பகுதி I

❖ எல்லா வினாக்களுக்கும் பொருத்தமான விடையை தெரிவு செய்க.

01) பொருட்கள் சேவைகளின் பரிமாற்றத்திற்கு அடிப்படையாக அமைவது,
(01) நேர் உற்பத்தி (02) நேரில் உற்பத்தி (03) மிகை உற்பத்தி (04) பண்டமாற்று

02) ''வணிகம்'' என்பதற்கு மிகவும் பொருத்தமான வரைவிலக்கணமாக அமையக்கூடியது.
(01) வியாபாரமும் மற்றைய சேவைகளும்.
(02) வணிகத்தின் அதீத வளர்ச்சி
(03) வணிகமும் அதனோடு இணைந்த தகவல் தொழில்நுட்பமும்.
(04) மனித தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்யக்கூடிய எந்தவொரு பொருளாதார நடவடிக்கையும்.

03) உலகமானது சுருங்கி உலக கிராமமாக மாற்றமடைந்ததன் பிரதான காரணமாக அமைவது,
(01) மனித தேவைகளும் விருப்பங்களும் அதிகரித்தமை.
(02) சனத்தொகை அதிகரிப்பு.
(03) நிகழ்நிலை வணிகத்தின் (on. Line trading) வளர்ச்சி.
(04) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் அபிவிருத்தி.

04) பின்வருவனவற்றுள் சேவைகளின் பண்பாக அமையாதது.
(01) களஞ்சியப்படுத்த முடியும். (02) கட்புலனாகதது.
(03) வழங்குனருக்கு ஏற்பட தரம் வேறுபடும். (04) தொட்டுணர முடியாது.

05) வணிகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வணிகத்தினுள் தொழிற்படுகின்ற பல்வேறு பிரிவினர்களை உள்ளடக்கிய சூழல் ................................... ஆகும்.
(01) வணிகச்சூழல். (02) அகச்சூழல் (03) புறச்சூழல் (04) சர்வதேச சூழல்

06) புறச்சூழல் காரணிகளை மட்டும் உள்ளடக்கிய தொகுதியாக அமைவது.
(01) உரிமையாளர், முகாமையாளர், தொழிலாளர்
(02) உரிமையாளர், முகாமையாளர், நுகர்வோர்
(03) வழங்குனர், வாடிக்கையாளர், முதலீட்டாளர்.
(04) தொழிலாளி, வாடிக்கையாளர், நுகர்வோர்

07) பொருளாதார சூழல் காரணிகளை மட்டும் கொண்டுள்ள தொகுதி யாது?
(01) வட்டிவீதம், பணவீக்கம், நானோ தொழில்நுட்பம்.
(02) பணவீக்கம், நாணய மாற்று வீதம், வருமான பரம்பல்.
(03) வருமானம், வேலைவாய்ப்பு, நிதிக்கொள்கை.
(04) கம்பனிச்சட்டம், வற், நிதிக்கொள்கை.

08) இன்று நுகர்வோர்கள் பொருட்கள், சேவைகளை நிகழ்நிலை வியாபாரத்தின் ஊடாக வெளிநாட்டு சந்தையிலிருந்து பெற்றுக்கொள்ளும் நிகழ்வு உள்ளடக்கப்படும் சூழலாக அமைவது,
(01) பொருளாதார சூழல் (02) அரசியல் சூழல்
(03) தொழில்நுட்ப சூழல் (04) பூகோளமய சூழல்


kalvi.lk

09) வணிகச் சூழலை ஆய்வு செய்வதன் மூலம் அடையாளம் காணக்கூடிய அச்சுறுத்தல், பலவீனமாக அமையக்கூடிய விடைத்தொகுதி.

(01) வரி அதிகரிப்பு, அர்ப்பணிப்பான தொழிலாளர்.
(02) நிதி பற்றாக்குறை, புதிய போட்டியாளர்.
(03) பயிற்றப்படாத தொழிலாளர், புதிய போட்டியாளர்.
(04) புதிய போட்டியாளர் பயிற்றப்படாத தொழிலாளர்கள்.

10) புதிய தொழில்நுட்பத்தை பின்பற்றுவதற்கு வணிகத்திற்கு ஏற்படும் சிக்கலானது ஒரு…..

(01) பலமாகும். (02) பலவீனமாகும். (03) சந்தர்ப்பமாகும். (04) சவாலாகும்.

❖ **திரு. வும்சியும் அவரது இரு நண்பர்களும் கொழும்பு மருத்துவக்கல்லூரியில் பட்டம் பெற்ற பட்டதாரிகள…. அவர்கள் "மெடி ரெஷ்டி" எனும் பெயரில் மருத்துவ நிலையம் ஒன்றை ஆரம்பிக்க திட்டமிட்டிருந்தார்கள்.**

11) திரு. வம்சி மற்றும் அவரது நண்பர்களால் உருவாக்கக்கூடிய வணிக அமைப்பு யாது?

(01) தனிவியாபாரம் (02) பங்குடமை
(03) கூட்டுறவு அமைப்புக்கள் (04) கூட்டுத்தாபனம்

12) "மெடி ரெஷ்ட்" தொடர்பில் பொருத்தமற்ற கூற்றாக அமையக்கூடியது?

(01) பங்குடமை ஒப்பந்தம் ஒன்றின் கீழ் உருவாக்கக் கூடியது.
(02) பதிவு செய்தல் கட்டாயமானவை.
(03) சட்ட ஆளுமை உடையது.
(04) திரு வம்சியும் அவர்களது நண்பர்களும் பங்குடமையின் பொறுப்புக்களை தீர்க்க சொந்த சொத்துக்களையும் ஈடுபடுத்த வேண்டி வரும்.

13) "மெடி ரெஷ்ட்" நிறுவனமானது பங்குடமையாக உருவாக்கப்படின் அதன் உச்ச பங்காளர் எண்ணிக்கை வரையறுக்கப்படுவது.

(01) பங்குடமை உடன்படிக்கைக்கு அமைவாக (02) 1890ம் ஆண்டின் பங்குடமை சட்டப்படி
(03) 2007ம் ஆண்டின் 07ம் இலக்க கம்பனி சட்டப்படி. (04) கடை காரியாலய திட்டத்தின் படி

14) "பொருள் உற்பத்தி தன்மையின் அடிப்படையில் "மெடி ரெஷ்ட்" வணிகமானது எவ்வகையினுள் அடங்கும்.

(01) பொருள் உற்பத்தி வணிகம். (02) சுகாதார மையம்.
(03) சேவை உற்பத்தி வணிகம் (04) இலாப நோக்குடைய வணிகம்

15) "மெடி ரெஷ்ட்" வியாபார நிறுவனத்தின் பெயரை பதிவு செய்வதற்கு அமைவான சட்டமாக அமைவது.

(01) 1890ம் ஆண்டின் பங்குடமை சட்டம்
(02) 2007ம் ஆண்டின் 07ம் இலக்க கம்பனி சட்டம்
(03) 1918ம் ஆண்டின் 06ம் இலக்க வியாபார பெயர் பதிவு கட்டளை சட்டம்
(04) மேற்கூறிய யாவும் தவறானது.

16) வியாபார நிறுவனங்களை அளவின் அடிப்படையில் வகைப்படுத்தும் போது கருத்தில் கொள்ளப்பட முடியாத விடயமாக அமைவது.

(01) ஈடுபடுத்திய மூலதனத்தின் அளவு (02) வணிகத்தால் உழைக்கப்பட்ட இலாபத்தின் அளவு
(03) தொழிலாளர்களின் எண்ணிக்கை (04) வணிகத்தின் சந்தை பங்கு

17) ஏந்தவொரு வணிக அமைப்புக்கும் பொதுவாக இருக்கக்கூடிய பண்பாக அமைவது,

(01) சட்ட ஆளுமை (02) அங்கீகாரம்
(03) நோக்கத்தை கொண்டிருத்தல் (04) கணக்கு முறையை பராமரித்தல்


kalvi.lk

18) கூட்டிணைக்கப்பட்ட கம்பணி ஒன்றின் இயக்குனர் சபை உருவாக்கப்படுவது,

(01) பங்குதாரர்களால் (02) பங்காளர்களால்

(03) அக்கறை உடைய தரப்பினரால் (04) அரசாங்கத்தினால்

19) இயக்குனர் சபையால் நிர்வகிக்கப்படும் வணிக அமைப்புக்களை மட்டும் கொண்டுள்ள தொகுதியாக அமைவது,

(01) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி, கூட்டுறவு அமைப்பு, அரச கூட்டுத்தாபனம்.

(02) அரச திணைக்களம், அரச கூட்டுத்தாபனம், பங்குடமை

(03) கூட்டிணைக்கப்பட்ட கம்பனி, அரச திணைக்களம், கூட்டுறவு அமைப்பு

(04) அரச கம்பனி, அரச திணைக்களம், அரச கூட்டுத்தாபனம்.

20) அரச கூட்டுத்தாபனம் உருவாக்கல் தொடர்பிலான பொருத்தமான சட்டமாக அமைவது,

(01) பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படும் பொதுவான மற்றும் விசேட சட்டங்கள்.

(02) 2007ம் ஆண்டின் 07ம் இலக்க கம்பனி சட்டம்.

(03) பாராளுமன்றத்தில் உருவாக்கப்பட்ட பொது சட்டம்.

(04) நிதி அமைச்சு மற்றும் திறைசேரி தொடர்பிலான சட்டங்கள். (20 x 2 = 40 புள்ளிகள்)

## பகுதி II

❖ **1ம் வினா உட்பட மூன்று வினாக்களிற்கு விடையளிக்குக.**

**01) பின்வரும் சம்பவக் கற்கையை அவதானமாக வாசித்து 1 – 10 வரையிலான வினாக்களிற்கு விடையளிக்குக.**

உற்பத்தி சந்தைப்படுத்தல் கற்கை நெறியில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்த திரு. டாம் என்பவர் ''டாம் மையம்'' என்ற பெயரில் வணிகம் ஒன்றை ஆரம்பித்தார். அவர் இயற்கை முறையில் அமைந்த பண்ணையிலிருந்து பால் மற்றும் பாற் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகிறார். இறக்குமதி செய்யப்பட்ட மாடுகளுக்கான தீவனமாக இயற்கையாக கிடைக்கும் புற்கள் மற்றும் வாழையிலைகள் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் பற்றாக்குறை ஏற்படும் போது சாடுபடி செய்யப்பட்ட உயர்தர புற்களும் பயன்படுத்தப்படுகின்றன. உற்பத்தி துறைக்காக 5 தொழிலாளர்களும் சந்தைப்படுத்தல் துறைக்காக 2 அனுபவம் வாய்ந்த முகாமையாளர்களும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். நாட்டின் அண்மைய பொருளாதார நிலைமைகள் உள்ளூர் பால் உற்பத்திக்கான கேள்வியை அதிகரித்திருந்தது. இதனால் அரசாங்கம் உள்ளூர் பால் உற்பத்தியாளருக்கான பல ஊக்குவிப்புக்களை அறிவித்திருந்தது. இதனால் பல படித்த இளைஞர் யுவதிகள், பால் உற்பத்தியில் ஈடுபட ஆர்வம் காட்ட தொடங்கியுள்ளனர். திரு. டாம் நிகழ்நிலை மூலமான வியாபாரத்தை ஆரம்பிக்கவும் அதற்காக தனது ஊழியர்களை பயிற்றுவிக்கவும் எண்ணியுள்ளார். மேலும் மூலதன மற்றும் இதர பங்களிப்புக்காக தனது நண்பனான திரு. சேதுவை வியாபார பங்காளராக இணைத்துக் கொள்ளவும் எண்ணியுள்ளார்.

(01) உடமையின் அடிப்படையில் ''டாம் மையம்'' ஆனது எவ்வகை வியாபார நிறுவனமாகும்?

……………………………………………………………………………………………………

(02) உற்பத்தி பொருளின் தன்மையின் ''டாம் மையம்' எவ்வகை வியாபார நிறுவனமாகும்?

……………………………………………………………………………………………………

(03) மேற்படி சம்பவ கற்கையை தொடர்புபடுத்தி உற்பத்தி காரணிகளை இனங்காண்க?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

(04) இவ் வியாபார நிறுவனத்தின் நன்மைகள் 02 தருக?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………


kalvi.lk

(05) இவ் வியாபார நிறுவனத்தின் தீமைகள் 02 தருக?

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

(06) "டாம் மையமானது" பதிவு செய்ய வேண்டும் என்ற அவசியமில்லை" என்ற இக்கூற்றை ஏற்றுக்கொள்கிறீரா? காரணம் தருக?

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

(07) வியாபார நிறுவனத்தின் பலம் 02 தருக?

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

(08) வியாபார நிறுவனத்தின் பலவீனங்கள் 02 தருக?

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

(09) இவ் வணிகத்தின் சந்தர்ப்பங்கள் தருக?

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

(10) திரு. டாம் தனது நண்பனுடன் இணைந்து உருவாக்கக்கூடிய வியாபார அமைப்பு யாது?

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

(10 x 2 = 20 புள்ளிகள்)

**02)**

(01) a. விருப்பங்கள் என்றால் என்ன?

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

b. சேவைகளின் பண்புகள் 02 தருக?

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

(04 புள்ளிகள்)

(02) பின்வரும் கூற்றுக்கள் உண்மையா (√) அல்லது பொய்ய (×) என குறிப்பிடுக.

1. இலாப நோக்கமுடைய வணிகத்தில் நுகர்வோன் திருப்தியை அதிகரித்தல் ஒரு நோக்கமாக அமைய முடியாது. (………)
2. பொழுதுபோக்கானது மனிதனுக்கு ஒரு தேவையாக இருக்க முடியாது. (………)
3. வருமான பரம்பல் மட்டமானது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் சாதகமான விதத்தில் இருக்கும். (………)
4. வணிகத்திற்கு வளங்களை வழங்கும் நபர்களாக உரிமையாளர் காணப்படுவர். (………)

(1 x 4 = .04 புள்ளிகள்)



kalvi.lk

(03)

1. வெவ்வேறு வியாபார பெயர்களின் (brand name) கீழ் நுகர்வோர்கள் பண்டங்களை தெரிவு செய்வதற்கான காரணங்கள் 02 தருக?

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

2. நுகர்வோரிகளிலிருந்து வாடிக்கையாளர்களை வேறுபடுத்துக?

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………..

(2 x 2 = 04 புள்ளிகள்)

(04) பின்வரும் வினாக்களிற்கு பின்வரும் சம்பவத்திலிருந்து விடையளிக்குக.

திரு. ராம்சி தனியார் கல்வி நிறுவனம் ஒன்றிற்கு முன்பாக "ராம்சி உணவகம்" என்ற பெயரில் ஆரம்பித்தார். உணவு தயாரிப்புக்காக அனுபவம் வாய்ந்த சமையல்காரர் என திரு. ரொக்சி என்பவரை நியமித்தார். இவ் உணவகத்தின் பிரதான உணவாக "பர்கர்" (hot burger) காணப்படுகிறது.

1. இவ்வுணவகத்தால் பூர்த்தி செய்யப்படும் அடிப்படை மனித தேவை யாது?

…………………………………………………………………………………………………………

2. இவ்வுணவகத்தினால் பூர்த்தி செய்யப்படும் விருப்பம் யாது?

…………………………………………………………………………………………………………

3. இவ்வுணவகத்தின் பலம் யாது?

…………………………………………………………………………………………………………

4. "ராம்சி" உணவகத்தின் அக்கறை உடைய தரப்பினரை தருக?

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

(2 x 4 = 08 புள்ளிகள்) (20 புள்ளிகள்)

**03)**

(01) 1. வணிகச் சூழல் என்றால் என்ன?

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

2. வணிகச்சூழலின் வகைகளை உதாரணத்துடன் தருக.

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

(2 x 2 = 04 புள்ளிகள்)

(02) பின்வரும் கூற்றுக்கள் **உண்மையா** அல்லது **பொய்யா** என குறிப்பிடுக.

1. சேமிப்புக்கள் செலவினங்களில் தங்கியுள்ளது. (………………)
2. வரவு செலவுத் திட்டமானது சட்ட சூழல் காரணியாகும். (………………)
3. வணிகச் சூழலானது வணிகத்தினால் கட்டுப்படுத்தக்கூடியது. (………………)
4. நுகர்வோனின் வாழ்க்கை முறை மாற்றமானது வணிக நிறுவனங்களுக்கு சவாலாகவோ அல்லது சந்தர்ப்பமாகவோ அமையலாம். (………………)

(1 x 4 = 04 புள்ளிகள்)



kalvi.lk

(03)

1. கூட்டிணைக்கப்பட்ட கம்பனி என்றால் என்ன?

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………..

2. சட்ட ஆளுமையையும் வரையறுக்கப்பட்ட பொறுப்பையும் உடைய வணிக நிறுவனங்கள் எவை?

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………...

(2 x 2 = 04 புள்ளிகள்)

(04) திரு. ரோமியோவும் திரு. டானியோவும் இணைந்து ரோமியோ அன்ட் டானியோ மையம் எனும் பெயரில் பங்குடமை வணிகம் ஒன்றை ஆரம்பித்தனர்.
மேற்படி சம்பவத்திற்கமைவாக பின்வரும் வினாக்களிற்கு விடையளிக்குக.

1. "ரோமியோ டானியோ எனும் பங்குடமை வணிகத்தை பதிவு செய்வதன் மூலம் சட்ட ஆளுமை உடைய நிறுவனமாக மாற்ற முடியும்" என்ற கூற்றை ஏற்றுக்கொள்கிறீரா? காரணம் தருக.

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………...

2. அவர்கள் தமது நிறுவனத்தை ஜனநாயக கட்டுப்பாடுகளுடன் கூடிய சட்ட ஆளுமை உடைய நிறுவனமாக மாற்ற விரும்பின் உருவாக்கக்கூடிய வணிக நிறுவனம் யாது?

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

(2 x 2 = 04 புள்ளிகள்)

(05) பொருத்தமான விடையை இடைவெளியில் எழுதுக.

1. சட்ட ஆளுமை என்பது.

…………………………………………………………………………………………………………

2. எழுத்து மூல பங்குடமை ஒப்பந்தம் ………………………………………… அழைக்கப்படும்.

(2 x 2 = 04 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

**04)**

(01) 1. கணக்கீடு என்றால் என்ன?

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………...

2. கணக்கீட்டின் பிரதான நோக்கம் யாது?

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………...

(2 x 2 = 04 புள்ளிகள்)



kalvi.lk

(02) 1. கணக்கீட்டின் மூலங்கள் எவை?

............................................................................................................

2. சொத்தொன்றின் பண்புகள் யாவை?

............................................................................................................

............................................................................................................

(2 x 2 = 04 புள்ளிகள்)

(03) 2022 ஆண்டுகளுக்கான அருணு வியாபார நிறுவனத்தின் சில தகவல்கள் வருமாறு,

01.01.22 இல் மூலதனம் 500 000 /=

மொத்த வருமானம் 230 000 /=

மொத்த செலவினம் 150 000 /=

மேலதிக மூலதனம் 100 000 /=

உரிமையாளர் பற்று 50 000/=

31.12.2022 இல் உரிமை யாது?

............................................................................................................

............................................................................................................

............................................................................................................

(04 புள்ளிகள்)

(04) மொறட்டுவ தளபாட வியாபார நிறுவனத்தின் பின்வரும் தகவல்களை கொடுக்கப்பட்ட வகையீட்டின் கீழ் அடையாளமிடுக. (√)

| | நடைமுறை சொத்து | நடைமுறை அல்லா சொத்து | நடைமுறை பொறுப்பு | நடைமுறையல்ல பொறுப்பு |
|---|---|---|---|---|
| 1. தளபாடம் | | | | |
| 2. கட்டடம் | | | | |
| 3. கடன்பட்டோர் | | | | |
| 4. கடன்கொடுத்தோர் | | | | |
| 5. வங்கி மேலதிக பற்று | | | | |
| 6. இயந்திரம் | | | | |
| 7. வங்கிகடன் (02 வருடம்) | | | | |
| 8. வங்கிமீதி | | | | |

(8 x 1 = 08 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)



kalvi.lk

May

ONLINE CLASSES - 2025

# NEW ADMISSIONS

## 2ம் தவணை வகுப்புகள்

### தரம் 6 முதல் O/L வரை

**அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ் ...**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் ZOOM APP மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.



**JOIN NOW**

WWW.KALVI.LK

**075 287 1457**